**ஆங்கில மொழி பட்டப்பின் படிப்பு நிறுவனம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஆங்கில மொழி பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆவது பிரின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 2005 இன் 04 ஆம் இலக்க ஆங்கில மொழி பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் விதப்புரையின் 18 ஆவது பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால்

செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| **உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 முதல் 2020 காலப்பகுதிக்கு உரிய 09 நாட்குறிப்புக்களில் பொது ஒதுக்கம் ரூபா 45,965 இனால் அதிகரித்தமை, | சுருக்கமாக எடுப்போமாயின் இதன் தாக்கம் ரூபா 45,965 ஆனமையால் அப்பெறுமதி ஒதுக்கக் கணக்கில் ரூபா 45,965 வரவு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை |

| | |
|---|---|
| பெறவேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 91,075 இனாலும் மற்றும் முற்கொடுப்பனவுக் கணக்கு மீதி ரூபா 137,040 இனாலும் குறைவடைந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் அந்த சீராக்கங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | வைப்பதற்கும், செலவு எடுத்தல் வேண்டும். வைப்பதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 7,967,631 ஆக இருந்த போதிலும் பட்டோலையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 6,039,181 ஆனமையால் ரூபா 1,928,450 வேறுபாடு காணப்பட்டது. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள வேறுபாடுகளுக்கு நிறுவனத்தால் ஆண்டில் பேராசிரியர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட பணிக்கொடை கொடுபனவே காரணமாக இருந்தது. | பணிக்கொடைகளுக்காக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடை பணம் செலுத்தும் போது அந்த நிதியேற்பாட்டில் இருந்து குறைத்தல் வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டின் போது மின்சார சபைக்கு செலுத்தப்பட்ட ரூபா 95,694 ஆன வைப்புத் தொகை கட்டிடக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட தவறை மீளாய்வாண்டின் போது சரி செய்யும் போது பொது ஒதுக்கக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதன் காரணமாக பொது வைப்பு மீதி மற்றும் பொது ஒதுக்கம் என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது வைப்புக் கணக்கில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய தவறை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | காசாக கிடைக்கப் பெற்ற முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 17,493,359 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ரூபா 17,630,353 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் கணக்குகள் தயாரிக்கும் போது பிற்போட்ட ரீதியில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது காசாக கிடைத்த முதலீட்டு வட்டி வருமானம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் சீராக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதியல்லா பாய்ச்சல்கள் (Non cash movements) இன் கீழ் வட்டி வருமான | இந்தப் பெறுமதி திறைசேரி உண்டியல் வட்டி மற்றும் நிலையான வைப்பு வட்டிகள் சேர்க்கப்பட்ட இரண்டு பெறுமதிகளாக | நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு உரிய தகவல்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| சீராக்கமாக (Adjustments of Interest) ரூபா 278,682 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இருந்ததுடன் உரிய சான்றுகள் கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11(அ), 9(2)(ஊ) மற்றும் 10(5)(1) ஆம் பிரிவுகள் | உரிய அமைச்சரினதும் நிதி விடயப் பொறுப்பு அமைச்சரினதும் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் நிறுவனத்தால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உழைக்கப்பட்ட வருமானங்களில் ரூபா 102,501,956 தொகை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | திறைசேரி உண்டியல்களில் நிறுவனத்தால் உழைக்கப்பட்ட வருமானமே முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வாறு முதலீடு செய்வதற்கு 2015 யூலை 17 ஆந் திகதி காணப்பட்ட 79 ஆவது முகாமைத்துவ சபையின் போது அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | நிதிச்சட்டத்தின் பிரகாரம் முறையான பிரகாரம் அங்கீகாரத்தைப் பெற்று முதலீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய இலக்கம் 842 என்ற திறைசேரி சுற்றறிக்கை | கிரயம் ரூபா 2,522,528 ஆன புத்தகங்கள் மற்றும் வார சான்றிதழ்கள் திறந்த பல்கலைக்கழகத்தின் நூலகத்தை நடாத்திச் செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட போதும் அதற்குரிய அதிகார பலம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் பரிசீலனை பதிவேடு மற்றும் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. 2008 ஆம் ஆண்டு முதல் நூலகப் புத்தகங்கள், வார | கணக்காய்வு அவதானிப்பு மற்றும் பரிந்துரையின் பிரகாரம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாளிதழ்கள் மெய்மையாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நூலகப் புத்தகங்கள் மற்றும் வார சஞ்சிகைகள் பிரதான நூலகத்தில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2018 நவம்பர் 26 ஆந் திகதிய இலக்கம் 15/2018 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | 2023 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட ஊழியர் காப்புறுதி உத்தேச திட்டத்திற்காக ரூபா 234,981 தொகை நிறுவனத்தின் உள்ளக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு உள்ளக் குழு மற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களின் பரிந்துரையின் அடிப்படையில் நலன்கள் விண்ணப்பத்திற்காக விசேட நிபுணத்துவ வைத்தியர்களை சந்தித்தல், மருந்து பட்டியல்களாக ரூபா 91,377 அத்தொகையில் இருந்து மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் சுயமான நிருவாக சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் பல்கலைக்கழக பதவியணியினருக்காக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் பதவியணியினர் காப்புறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் மிகவும் குறைந்த பதவியணியினருடன் நிறுவனத்திற்காக மேற்கூறப்பட்ட நிறுவனத்தின் மூலம் காப்புறுதி மேவுகையை பெற்றுக் கொள்வதற்கு இணங்காதிருந்தமையால் பல்கலைக்கழகத்தின் மூலம் இந்தப் பணிகளை நிறைவேற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,585,530 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 17,317,750 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 25,898,280 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பாடநெறிக் கட்டண வருமானம் ரூபா 3,618,680 இனாலும், அரசாங்கத்தின் மீண்டெழும் மானியம் ரூபா 26,464,000 இனாலும் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனம் சார் அபிவிருத்தி நிதியத்தில் (PGIE Development Fund) காணப்பட்ட ரூபா 3,967,500 தொகை 08 வருட காலம் முதல் உரிய நோக்கங்களுக்காக பயன் படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்தத் தொகை நிறுவனத்திற்காக உருவாக்கப்பட்ட முகாமைத்துவ தகவல் முறைமைக்காக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நிதியத்தை ஸ்தாபித்த நோக்கங்களுக்காக வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மாணவர் வருமானம் ரூபா 1,327,867 ஆக இருந்ததுடன் அதில் 02 வருடங்களுக்கு மேற்பட்டு கிடைக்க வேண்டிய மாணவர் வருமானம் ரூபா 426,450 ஆகும். | மாணவர்களை மீண்டும் பதிவு செய்தல் ஒவ்வொரு வருடமும் இடம் பெறுவதுடன் அவர்களிடம் இருந்து மீண்டும் பதிவு செய்யும் போது சகல நிலுவைப் பணத்தையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை மிஞ்சி விரிவுரையாளர்களும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடங்காத மூன்று பதவிகளுக்கதக | அத்தியாவசிய அலுவலக செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்பு படுத்துகின்ற நடவடிக்கைகளுக்கு தேவையான ஆகக் கூலி குறைந்த ஊழியர் வெற்றிடங்களின் அளவு | சகல ஆட்சேர்ப்புக்களும் முறையான அங்கீகாரத்தின் அப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் 14 உத்தியோகத்தர்களும் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 4,673,238 படியாக செலுத்தப்பட்டிருந்தது.

அல்லது நிரப்பப்படும் வரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்பட்ட தற்காலிக அனுமதியின் அடிப்படையில் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.